Register No. [ ] [ ] [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

FAXA

5850–23

(For the candidates admitted from 2017-2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five – year Regular Course)

Fifth Year – Tenth Semester

## CRIMINOLOGY AND PENOLOGY

GOVERNMENT LAW COLLEGE TRICHY LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. The development of technology and electronic media has given rise to new varieties of crime – Discuss.

   தொழில்நுட்ப வளர்ச்சியும், மின்னணு ஊடக வளர்ச்சியும் புது விதமான குற்றங்கள் தோன்ற காரணிகளாக அமைந்துள்ளன எனும் கூற்றை விவாதிக்கவும்.

2. "There is a correlation between violent crimes and acute stage of alcoholism" – Analyse.

   "மிதமிஞ்சிய குடிபோதைக்கும் வன்முறை குற்றங்களுக்கும் இடைத்தொடர்பு உள்ளது" – ஆராய்க.

3. "The purpose of imprisonment is to reform the criminals and not to punish them" – Explain the statement.

   "குற்றவாளிகளைச் சிறைவைத்தலின் நோக்கம் திருத்துவதற்கேயன்றி அவர்களை தண்டிப்பதற்கல்ல" – கூற்றினை விளக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define Indeterminate Sentence. Enumerate the merits and demerits of indeterminate sentence.

   காலம் குறிப்பிடா தண்டனையை விளக்கவும். அதன் நன்மைகள் மற்றும் தீமைகளை எடுத்தியம்பவும்.

5. Describe the Psychoanalytical theory as propounded by Sigmund Freud.

சிக்மண்ட் ஃபிராய்ட் கூறிய மனவியல் பகுப்பாராய்ச்சி கோட்பாட்டினை விவரிக்கவும்.

6. Define White – collar Crime. What are the various factors which are responsible for the commission of white – collar crime?

செல்வாக்காளர் குற்றம் என்பதை வரையறுக்கவும். செல்வாக்காளர் குற்ற வினையில் ஈடுபட காரணமாக அமையும் பல்வேறு காரணிகள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Fast Track Courts

விரைவு நீதிமன்றங்கள்

(b) Political Ideology and Crime

அரசியல் கொள்கையும் குற்றமும்

(c) Genocide

இனப்படுகொலை

(d) Beccaria

பெக்காரியா

(e) Child in need of care and protection

பேணுதல் மற்றும் பாதுகாப்பிற்கேங்கும் குழந்தைகள்

(f) Irresistible Impulse

தடுக்கவியலா உந்து

(g) Victimology

பாதிப்பியல்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A's father left him when he was 5 years old. Since then he had a very difficult time to trust people. Discuss the behaviour of 'A' with relevant theory.

'அ'-வின் தந்தை அவருக்கு 5 வயது உள்ளபோது பிரிந்து செல்கிறார். அன்றிலிருந்து அவர் அனைவரின் மேல் நம்பிக்கை வைத்து பழகுவதை கடினமாக உணர்கிறார். 'அ'-வின் இத்தகைய செயல்பாட்டினை உரிய கோட்பாட்டுடன் விளக்குக.

9. 'A' has the habit of digging dead bodies and stealing their belongings and using it. Whether 'A' has committed any offence?

'அ' என்பவருக்கு பிணங்களைத் தோண்டி எடுத்து அவற்றிலிருந்து உடைமைகளை எடுத்து பயன்படுத்தும் பழக்கம் உள்ளது. 'அ' ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

10. 'A' takes pictures of 'B' wherever 'B' is going without his knowledge daily. Whether 'A' has committed any offence?

'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குத் தெரியாமல் தினமும் அவரை பின் தொடர்ந்து புகைப்படம் எடுப்பதை வாடிக்கையாக செய்கிறார். 'அ' ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

Register No. | | | | | | | | |

**FAXB** **5851–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five-year Regular Course)

Fifth Year – Tenth Semester

INTELLECTUAL PROPERTY LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define Intangible Property. Explain the different forms of Intellectual Property in India.

   "கண்ணுக்கு புலப்படாத சொத்துக்கள்" என்பதை வரையறை செய்து இந்தியாவில் உள்ள பல்வேறு விதமான அறிவுசார் சொத்துக்கள் குறித்து விளக்கவும்.

2. Explain the Restoration, Surrender and Revocation of Patents.

   காப்புரிமைகளை திரும்பபெறுதல், ஒப்புவிப்பு மற்றும் மீட்டொப்படைத்தல் பற்றி விவரி.

3. Explain the law relating to "deceptive similarity" with the help of decided cases.

   "ஏமாற்றும் அளவிற்கு ஒத்திருத்தல்" சம்பந்தப்பட்ட சட்டத்தினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை துணை கொண்டு விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the functions of Copy Rights Society.

   பதிப்புரிமை சங்கத்தின் செயல்பாடுகளை விளக்குக.

5. Explain the compulsory licensing under Indian Patent Act, 1970.

இந்திய காப்புரிமைச் சட்டம், 1970ன் கீழ் கட்டாய உரிமம் குறித்து விளக்கவும்.

6. Can traditional knowledge is patentable? Explain.

தொன்மை அறிவினை காப்புரிமை பெற இயலுமா? விளக்கவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) WIPO (World Intellectual Property Organisation)

உலக அறிவுசார் சொத்து அமைப்பு

(b) Performer's Rights

நிறைவேற்றுனர் உரிமைகள்

(c) Controller of Patents

காப்புரிமை கட்டுப்பாட்டாளர்

(d) Term of copyrights

பதிப்புரிமைகள் காலம்

(e) Remedies for infringement of trade marks

வணிக முத்திரை மீறலுக்கான தீர்வழிகள்

(f) Industrial Designs Act, 2000

தொழிலக வடிவமைப்பு சட்டம், 2000.

(g) R.G. Anand - vs - Super Delux films AIR 1979 SC 1613.

ஆர்.ஜி. ஆனந்த் எதிர் சூப்பர் டீலக்ஸ் ஃப்ளிம்ஸ் AIR 1979 SC 1613

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A watch company had been selling its watches for 20 years under its registered name "Venus". Another watch company commenced to sell watches under the trade name "Venas". Is the company selling under the name "Venus" entitled for any remedy.

ஒரு வாட்ச் நிறுவனம் 20 வருடங்களாக தன் வாட்ச்களை "வீனஸ்" என்ற பதிவு பெற்ற வணிகப்பெயரின் கீழ் விற்பனை செய்து வந்தது. மற்றொரு வாட்ச் நிறுவனம் "வீனாஸ்" என்ற வணிகப்பெயரின் கீழ் தனது வாட்ச்களை விற்கத் துவங்கியது. வீனஸ் என்ற வணிகப்பெயரில் வாட்ச்களை விற்கும் நிறுவனத்திற்கு தீர்வழி உண்டா?

9. A cinematograph film producer engaged a music composer for the purpose of making music in his film. Both of them claim copyright in respect of composition of music. Decide.

ஒரு திரைப்பட தயாரிப்பாளர், தான் எடுக்கும் திரைப்படத்திற்கு இசையமைப்பாளரை அமர்த்துகிறார். இசையமைப்பிற்கு இருவரும் பதிப்புரிமை கோருகிறார்கள். தீர்வு செய்க.

10. Arun discovered a new gas that already exists in the air and applied for patent for his new product. Discuss its validity.

அருண் என்பவர் ஏற்கனவே காற்றில் கலந்திருக்கும் ஒரு புதிய வாயுவை கண்டுபிடித்து அதற்கு காப்புரிமை வேண்டி விண்ணப்பிக்கின்றார். இதன் செல்லும் தன்மையை ஆராய்க.

———————

Register No. | | | | | | | | |

**FAXC**

**[5876-23]**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

(Five-years Regular Course)

Fifth Year – Tenth Semester

# HUMAN RIGHTS LAW

Time : 2 ½ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Promotion and encouragement of respect for and observance of human rights and fundamental freedom is one of the purpose of the United Nations" — Critically examine.

   மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை மதிக்க மற்றும் கடைப்பிடித்தலையும் மேம்படுத்துதலையும் ஊக்குவித்தல் ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களில் ஒன்றாகும் என்பதை விமர்சன ரீதியாக ஆராயவும்.

2. Discuss the Part — III enumerated rights which are guaranteed to individuals under the International Covenant on Civil and Political Rights, 1966 (ICCPR, 1966).

   குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை, 1966-ன் கீழுள்ள பகுதி-III ல் தனிநபர்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ள உரிமைகளை எடுத்துக்கூறி விவாதிக்கவும்.

3. Examine the jurisdiction and procedures of the European Court of Human Rights.

   ஐரோப்பா மனித உரிமை நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு மற்றும் அதன் நடைமுறைகளை ஆராய்க.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the powers and functions of the National Human Rights Commission.

   தேசீய மனித உரிமை ஆணையத்தின் அதிகாரங்களையும் பணிகளையும் விவரிக்க.

5. In what way international civil and political rights have been incorporated into Part — III of the Constitution of India.

   எந்த வழி முறைகளின்படி சர்வுதேச குடிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பகுதி – III -ல் சேர்க்கப்பட்டுள்ளது.

6. Discuss the right to found family in Indian law and International Human Rights Law.

   இந்தியச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தில் குடும்பத்தை அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பற்றி விவாதிக்கவும்.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

   (a) Rights to Minorities.

   சிறுபான்மையினரின் உரிமைகள்.

   (b) ECOSOC.

   பொருளாதார சமூக அமைப்பு.

   (c) Genocide.

   இனப்படுகொலை.

   (d) Death penalty.

   மரண தண்டனை.

   (e) French Revolution.

   ஃபிரென்ஸ் புரட்சி.

   (f) Legal status of refugees in India.

   இந்தியாவில் அகதிகளின் சட்டப்படியான நிலை.

   (g) International Humanitarian Law.

   சர்வதேச மனிதாபிமான சட்டம்.

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Government Educational Department has issued a direction that all students must attend class only wearing uniform. But Fatima opposed it and challenged that to wear hijab is a essential practice of her religion. Whether to wear hijab is fundamental human right? Decide.

அரசாங்க கல்வித்துறை ஒரு செயலாக்க ஆணையின் மூலம் அனைத்து மாணாக்கர்களும் பள்ளி சீருடையில் வகுப்புகளில் இருக்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்தது. இவ்வுத்தரவை பாத்திமா என்னும் மாணவி ஹிஜாப் அணிவது அவளது மதச் சார்ந்த உரிமை என கூறி எதிர்க்கிறாள். இதில் 'ஹிஜாப்' அணிவது இன்றியமையாத மனித உரிமை ஆகுமா? தீர்மானிக்கவும்.

9. Mrs. M was accused of a non-cognizable compoundable offence. However due to poverty she could not defend herself in the Court of Law. She sought for legal aid which was denied. She approaches the Supreme Court. Decide.

திருமதி. எம் என்பவர் பிடியாணை வேண்டுதற்குரிய சமரசத்திற்குரிய குற்றம் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டார். ஆனால் அவருடைய வறுமையின் காரணமாக குற்றச்சாட்டுக்கு எதிர் விளக்கமளித்து நீதிமன்றத்தில் வழக்காட இயலவில்லை. அவர் வழக்குதவி கோரினார். ஆனால் அது மறுக்கப்பட்டது. அவர் உச்ச நீதிமன்றத்திற்கு மனு செய்தார். தீர்மானிக்கவும்.

10. 'A' and 'B' are same gender. They decided to marry and after marriage lead matrimonial life. 'B's mother has strongly opposed it and filed a case against 'A' under Sec.377 of IPC. 'A' contests the case by saying that right to marry is basic human right. Decide.

'அ' மற்றும் 'ஆ' ஒரே பாலினத்தை சார்ந்தவர்கள். இவருவரும் திருமணம் செய்து கொள்ள தீர்மானித்து பின்னர் மண வாழ்க்கையை வாழ்கின்றனர். இந்நிலையில் 'ஆ'-வின் தாயார் இத்திருமணத்தை கடுமையாக எதிர்த்து 'அ'-க்கு எதிரான இ.த.ச பிரிவு 377-ன் கீழ் வழக்கு தாக்கல் செய்கிறார். இவ்வழக்கில் 'அ' என்பவர் ஒருவர் திருமணம் செய்துகொள்வது ஒருவரின் அடிப்படை மனித உரிமையாகும் என எதிர்வாதம் புரிகிறார். தீர்மானிக்கவும்.